(3) அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களின் அனுமதியோடு இந்த கடிதத்தை இந்த அவைக்கு படிக்க விரும்புகிறேன். இந்தக் கடிதம் எழுதியது சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களாவர். இதை அவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்.

வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக் முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம்.

கடந்த 1—3—1978 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் என்மீது சாட்டிய குற்றச்சாட்டினைப் பற்றி என்னுடைய விளக்கத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பயன்படுத்துகிற அரசாங்க கார் டி. எம். வி. 7575 ரிப்பேர் வேலைகளுக்காகவோ சர்வீசுக்காகவோ ஒர்க் ஷாப்பிற்குச் செல்லுகிறபோது நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற இலாகாவைச் சேர்ந்த கார்களை நான் பயன்படுத்துவது வழக்கம்.

அதுபோல் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று என்னுடைய கார் ஒர்க்ஷாப்பிற்குச் சென்றிருந்தால் என்னுடைய உபயோகத்திற்கு என் சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து டி. எம். பி. 1144 வந்திருந்தது.

அன்று நான் அரசாங்க அலுவல் காரணமாக வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. அந்த நாளன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் எனது தாயார் அவர்கள் அந்தக் காரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய தாயார் வயதான காரணத்தினால் அவர்கள் வெளியிலே செல்லும்பொழுது

பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர், எங்கள் குடும்பத்திற்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்ற முறையில் தாயாரோடு அவர் வேலை நேரங்கள் இல்லாத போதும் கூட உதவிக்குச் செல்வது வழக்கம்.

இந்த முறையில்தான் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று எனது தாயாரும், பாதுகாப்பு அதிகாரியும் சென்றிருக்கிறார்கள். இதுதான் அந்தச் சம்பவம் நடைபெற்றதற்குப் பின்னணி என்றாலும், நான் பயன்படுத்துகிற இந்தக் காரை என் தாயார் உபயோகப்படுத்த உரிமை இருக்கிறதென்றாலும், நான் விரும்பாத ஒரு இடத்திற்கு அந்தக் காரை எடுத்துச் சென்றது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுபற்றிய செய்தி எனக்குத் தெரிந்தவுடன் என்னுடைய தாயாரையும், பாதுகாப்பு அதிகாரியையும் இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக் கூடாதென்று உண்மையாகக் கண்டித்திருகிறேன்.

எனவே, என்னுடைய கவனத்திற்கு அப்பாற்பட்டு நடந்து விட்ட இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எனக்குத் தெரியாமல் கூட நடைபெறாது என்பதற்கு உறுதி கூறுகிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள,
(ஒப்பம்) பி. டி. சரஸ்வதி.

(4) உரிமைப் பிரச்னைகள்.

(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலை முரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 27—2—1978 அன்று பேரவையில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீதும், திரு. து. புருஷோத்தமன் அவர்கள் மாலை முரசு நாளிதழ் மீதும், திரு. ஏ. ரகுமான்கான் தினமணி நாளிதழ் மீதும்,